
ஒற்றைக் குயில்

23-1-2024





















pax.ravichandra@gmail.com

Pax Ravichandra

கல்யாண மாலை

நூல்களைப் பகிர்ந்து நேசமாய்
வளர்ந்த உறவு, கவிதைகளைப் பகிர்ந்து
உள்ளக் கமலத்தைக் காடடிய நிகழ்வு
கனவுகளைப் பகிர, காதலாய் மாறிய உறவு



கண் பார்த்து நெஞ்சம் குளிர
பார்த்த கண்களில் குதுாகலம் பூக்க,
நாணத்தில் சிவந்த கமலம்
நாண் சூட தன்னை ஈந்த அமுதம்

யாராது? யாரது என் நெஞ்சில்
காதல் மழை பொழிவது
யாரது?, யாரது என் இதயத்தை
சொல்லாமல் திருடிப் போனது?

கார் குழலில் மல்லிகை மணக்க, செங்கனிவாயில்
புன்னகை பூக்க, மையெழுதிய சேல் விழிகளில் மயங்க
பிறை நுதலில் திலகம் சிரிக்க, என் இதயவீணையில்
காதல் இராகம் மீட்டிய கள்வன் யாரோ?

சிற்றிடையை மெல்லப் பற்றி, தேன் நிலவின்
பூ முகத்தில் கண்ணால் காதல் கோலமிட்டு
செவ்வாயில் முத்தம் பதித்து, அமுது தந்தவன்
என் இதயத்தை திருடிய காதற்கள்வன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-1-1-2024

கண்ணிலே அன்பிருந்தால்



கண்கள் கலந்திட கள்ளிருக்கும் மலராய்ப் பூத்தாய்
காதல் சொல்லிட செம்பூவாய் நாணிச் சிவந்தாய்
கொஞ்சும் கிளியாய் கொஞ்சிட, நாணி இரசித்தாய்
ஜோடிக் குயிலாய் இணைந்து கானம் இசைத்தாய்

கண்டு சிவந்த கன்னங்களோ கிண்ணம் பழங்கள்
உண்டு களிக்க மங்கையில் முக்கனிச் சுவைகள்
காதல் வண்டு மொய்க்காத வாச முல்லை-காதலாகிச்
சூடத் தந்த அழகில் ஆண்டாளாய்க் கோதை

அறம், பொருள் இன்பம் நிலைக்க
இருவரிக் குறளாய் நம் காதல்
இருமனங்கள் இணையும் போது
வீடே நம்பேறு, வாழ்வோ தேனாறு

கண் வழி காதலை விதைத்தபோது
என் மனமோ நானிலம்-காதலே
உன்னைப் பிரிந்தபோது-என் மனமோ
கனல் தெறிக்கும் பாலை வனம்

அறம், பொருள் அறிந்தும் காளை அறியாத
இன்பத்துப்பால்-காதலில் விழுந்து
உன்னிடம் கற்றேன், இரு மணம் இணைந்த
வாழ்வால் வீட்டைச் சுவைக்கின்றேன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra

மண வாழ்வு



இதயம் கலக்காமல்-பெரியோர் பேசி முடித்த
திருமணம் பொன் விலங்கானது-மனம் கலக்காமல்
உடல் கலக்கும் இராப்பொழுதுகள்
பெண்மையைக் கலங்கடிக்கும் நிகழ்வானது

இறக்கை கத்தரித்த பறவையாய் வாழ்வு
பறக்கத் துடித்தது பொழுதெல்லாம்
நாளும் மனதில் பல முறை சாவு

உழுது விளைத்த நிலம்
உயிர் கொள்ள-பெண்மையில்
தாய்மையின் மலர்வு

காலம் சில கடந்தும்-கலைஞனாய் மீட்டாத வீணை-
தந்தியறுந்திட காயமான இதயம்-கறுத்துக்
கற்பழிப்பான இரவில் ஏது உதயம்

பொன் மீனுக்குத் தெரியாது-வாழும்
மீன் தொட்டி சிறை என்று-பொற் கூண்டும்
சிறை என்று பூங்குயிலுக்குப் புரியாது

கடலும், வானும் காணாத எல்லை
கல்யாணமோ சிறையான தொல்லை
நெய் வளர்த்த தீயில் நீராடும் பெண்மை
சீதைக்கே புரிந்த ஸ்ரீராமனின் கொடுமை

காவிய காலத்து நங்கை, கண்டு காதல் வசப்பட்ட
மங்கை., காதலாகி வனம் போன கன்னி
கர்ப்பிணித் தாயாகி வனம் வாழ்ந்த அநீதி
ராஜா ராமனை விலக்கிய நீதி

வேரோடு பிடுங்கி எறியப்பட்ட பூஞ்செடி
விழுந்த மண்ணில் வேர் விட்டு எழுந்து நின்றது
வண்ண மலர்கள் பூக்க-இனி
வாழும் காலம் எந்நாளும் வசந்தம் என்றது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-16-11-2023

மண மாலை



வண்ணக் கனவுகளோடும், வாசமலர் மாலையோடும்,
எண்ணப் பறவை சிறகடிக்க-மஞ்சத்தில்
புத்தம் புது மலராய்-ஸ்ரீராமன் வரவுக்காய்
பூத்துக் காத்திருந்த வைதேகி

நெஞ்சில் ஆயிரம் வண்ணக் கனவு
நினைவில் நாணிச் சிவந்த காதல் உணர்வு
மஞ்சத்தில் மலர்கள், பாலும் பழமிருந்தும்
மனதில் பசியிருக்காத காதல் நிலைகள்

கூறை கசங்கவில்லை, கூந்தல்
மலர் உதிரவில்லை, பூவிதல் செம்மை
மறையவில்லை, மையெழுதிய பூவிழி
வெண்மை மாறவில்லை

மஞ்சம் வந்த மணாளனோ-நெஞ்சம்
புண்படத் துகிலுரிந்த துச்சாதனன்
அருச்சுனனை எண்ணி கனவு கண்ட மங்கை
அச்சத்தில் தன்னைப் பறிகொடுத்த மங்கை

காதலாகி கன்னி தாயக நூற்கும்
வேள்வியோ புனிதம்-கற்பழிப்பாய் தொடரும்
இரவுகளால்-கணவனோ
காமத் தொழுநோய் வாட்டும் மிருகம்

சூடிய மணமாலை வாடிக் கிடந்திட
கூறையும், மஞ்சமும் நாறி மணந்திட
கண் அவனோ காதல் வேதம் அறியாத காமுகன்
மரகத வீணையை மீட்கத் தெரியாத மூடன்

கன்னி தாயாக காதலாகி யாக்கும் வேள்வி
கற்பழிப்பான அசுர யாகமானது-போதையில்
காமம் தணிக்கும் மிருகத்தின் கால்களில்
பெண்மை பூவாய் நாளும் மிதியுண்டது

நாளும் பொன்னுடலில் வல்லுறவின் ஆட்சி
அன்பினால் பகிர்வதை அராஜகத்தால் பறித்திட,
பெண் மனதில் வெறுமையின் நீட்சி
தாலியை அறுத்துக் கோரிய சுய ஆட்சி

மஞ்சத்தில் பாலியல் வல்லுறவின் ஆட்சி-மங்கையோ
குரங்கின் கைப் பூமாலையான அவல நிகழ்ச்சி,
பொறுத்தது போதும் என்ற பூ நெஞ்சுக்குள்
எரிமலையின் விழிப்பு, மணவாழ்வோ வேம்பான கசப்பு

தாலியைக் களைந்தவள்,
மணவேலி கடந்தாள்-தாரம் என்ற
உறவைத் துறந்து -காளி என்
அவதாரம் என்றாள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-16-11-2023

பூ விழி வாசல்

தேனாய், வான் அமுதாய் இதயத்தில் இனித்தவளே-
உன் பிரிவால் என்னிதயத்திலோ நரக நெருப்பு,
மல்லிகையாய், முல்லையாய் என் சுவாசத்தில் மணந்தவளே,
உன்னால் என் உயிர்க் காற்றிலோ விஷ வாயுவின் கலப்பு.

என் இரவுகளுக்கு ஒளிகொடுத்த பௌர்ணமியே
நீயின்றி நித்தம் அமாவாசையடி-சோடிக்குயிலாய்
என்னோடு பூபாளம் இசைத்தவளே-நாளும்
என் இதயப் பூவனத்தில் ஒற்றைகுயிலின் புலம்பலடி

பூமனதைக் கல்லாக்கி, கனிமொழியை நெருப்பாக்கி
என்னை மறந்துவிடுங்கள் என்றாய்-
உனக்குள் துடிக்கும் என்னியத்தை கேட்டுப்பார்
என்னிதயம் உன்னை மறக்குமா என்று?
என்னில் உலாவும் உன் சுவாசக்காற்றை கேட்டுப்பார்
என்னிதயம் உன் காதலைத் துறக்குமா என்று?

உன்னை மறப்பதென்பது-என் இறப்பு
உன் நினைவே என் புத்துயிர்ப்பு-
மறக்கச்சொல்லி, என்னிதயத்தை நொருக்கியவளே
புயலும், பூகம்பமும், சுனாமியும்
ஒன்றாய் என்னைத் தாக்கிட-காதலின்
வேதனையை- காதலே நீ அறிவாயா?

விடியலில்லையடி என் வாழ்வில் -வெண்ணிலவே
மீண்டும் நீ உலா வரும்வரை-வசந்தமில்லையடி
என் வாழ்வில்- பூந்தென்றலே நீ மீண்டும் வீசும்வரை

வான் விழிக்கும் தேனிலவும்-வேல்விழியே
உன் பூமுகம் காட்டி வருத்துதடி
தேன்சுரக்கும் வாசமலர்களும்- தேவதையே
உன் செவ்வாயிதழ் முத்தம் சொல்லிச் சீண்டுதடி
தழுவிடும் வாசத்தென்றலும் -பூமகளே-உன்
பொன்மேனிச் சுகம் சொல்லி என் தேகம் தீய்க்குதடி

பூவிழி வாசலில் நின்று புலம்புகிறான்--உன் தேவதாஸ்
பார்வதி பரிவு காட்டடி,
தாஜ்மஹால் வாயில் நின்று கதறுகிறான்- ஷாஜகான்
மும்தாஜே கண்விழித்து காதல் சொல்லடி
தேவதாஸாய் அழிவதா-இல்லை
ஷாஜகாணாய் சாவதா சொல்லடி கண்மணி

கொதிக்கும் பாலையாய் நெஞ்சம் தகிக்க
லைலாவிற்காய் ஏங்கும்-மஜ்னு
கொடிய நஞ்சு உயிரைக் கொல்ல
யூலியட்டுக்காய் தவிக்கும் ரோமியோ.
கொடிது, கொடிது, காதல் கொடிது.

காதலால் கொல்லவோ
காதலே என்னைக் காதலித்தாய்?
காதல் கொள்வதே-
காதல் கொல்லும் என்பதை
அறியத்தான் போலும்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-04-2023

புயலிலாடும் பூக்கள்

கைமை விலங்காகித் தூக்குக் கயிறானால்
தாயே நீயும் -தாலி கட்டிக்கொள்
வெண்ணாடை களைந்து-வண்ணக்
கூறை அணிந்திடத் துணிந்து நில்
எழுக பெண்ணினமே
தங்கத்தாலியையும்-புது கூறையையும்
மீண்டும் அணிந்திட எழுக தாய்க்குலமே

இதயமணியாத எந்தத் தாலியும்
இரும்புத் தளைகளே
உதயம் தராத சூரியபுருஷர்களும்
செத்த கோள்களே

புரட்சி மலர்ந்திட பூமனதில் புதிய எழுச்சி கொள்க-
பழைமை உன் பாதைக்குத் தடைகல்லானால்-மிதித்து நட,
பண்பாடு உன் கழுத்துக்குக் சுருக்குகயிறானால்-அறுத்து எறி

புல்லல்ல நீ -உன்னைக் கிள்ளி எறிந்திட
புழுவல்ல நீ தூண்டில் புழுவாய் துடித்திட,
போகமல்ல நீ ஆணினம் அனுபவித்திட
அடங்கி வாழ்ந்திட அடிமையல்ல நீ.

பெண்ணே எழுந்து நில்-துணிந்து செல்
ஒரு முறைதான் வாழ்வு, ஒரு முறைதான் சாவு
வாழ்வு உன் கையில்

வெண்புறாவே உன் சுதந்திரச் சிறகை விரித்துப்
பறந்திடு, வானமே உன் எல்லை
வண்ண ரோஜாவே உன் வேர்களை ஆழப்பதி
பூமியே உன் கால்மனை

விண்ணை முட்டட்டும்-உன் விடுதலைகோஷம்
காற்றில் கலக்கட்டும் உன் பூவாசம்
வானமே உன் அரியணை-
பூமியே உன் கால்மனை

கத்தும் கடமேலும் உனக்கு முழங்காலளவே
கனலாய் உருகும்
எரிமலைக் குழம்பும்-நீ பூசிடச் சந்தனமே

புயலும் உனக்கு பூங்காற்றே
பேரிடியும் உனக்கு சங்கீதமே-தாய்க்குலமே
புரட்சிப் பெண்ணாய் எழுக
புதுமைப் பெண்ணாய் மலர்க

கல்வியெனும் ஒளிவிளக்கை கையில் ஏந்தி
கால் விலங்கெனும் சீதனத்தை
உடைத்துத் தூர எறி

உன் விருப்பின்றி தாலியும் விலங்காகும்போது,
பொறுப்பின்றி உன்னுடலை போகமாக்கும்போதும்,
விண்மீன் வானத்து வெண்நிலவே
சுட்டெரிக்கும் செஞ்சூரியனாய் நீ மாறு!
செந்தேன் மலர்வனத்து பூங்காற்றே
சுழன்றடிக்கும் சூறாவளியாய் நீ வீசு!

வானமே உன் எல்லை,
சுதந்திரக்காற்றே உன் உயிர் மூச்சு
வாழ்வு உன் கையில்
இன்றே வாழ்க! நன்றே வாழ்க!

சீதையால் எரிந்தது இலங்காபுரி
பாஞ்சாலியால் அழிந்தது கௌரவ குலம்
கண்ணகியால் எரிந்தது மதுரை
தாய்களே உங்கள் கண்ணீரால்
அழியட்டும் அதர்மம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-13-04-2023

சேவல் கூவாத ராகம்

ஓடக் கரையினிலே, ஒற்றைப்பனை நிழலினிலே
வெள்ளை கொக்கொன்று ஓடு மீனோட உறுமீனுக்காய்
ஒரு காலூன்றித் தவமிருக்கின்றது.

சிவந்த வானைக்கண்டு
முறிந்த பனையிலிருந்த கறுப்புச்சேவல்
சிறகடித்து உரக்கக்கூவியது ‘‘கொக்கரக்கோ’’ என்று
இந்த சேவல் கூவும் இராகம்தான் என்ன?

விரித்த இதழ்களோடும், மலர்ந்த புன்னகையோடும்
உதிர்ந்து , காற்றில் மெல்ல மிதந்து
நாட்டியமாடி வருகின்றது ஒரு சின்னப்பூ

தாமரை இலையில் தவமிருந்த தவளை
நாவினைத் துப்பி நளினமாய்ப் பிடித்தது
செபத்திலிருந்த‘‘கும்பிடு பூச்சியை’’

கண்களை மூடித் தூங்கினேன்
கறுப்பு இரவுக்குள் வண்ணக்கனவுகள்-கண்விழித்தபோது
தூவாத விதைகளாய் முளைக்கும் எண்ணங்கள்
காயாத வடுக்களாய் நெஞ்சுக்குள் கவலையின் சுவடுகள்.

இயற்கையின் படைப்பில் எல்லாம் அழகு
இரசிக்கத்தான் ‘‘இரசிகன்’’ இல்லை.

எத்துனை அழகு சேற்றில் முளைத்த செந்தாமரை
பச்சை குடையாய் இலைகள்
செஞ்சந்தனம் மணக்கும் இதழ்கள்
பொன்னிற மகரந்தமணிகள்

இருள் தன் கறுப்புக் கோலத்தை இட்டபோது
நிலவும் நட்சத்திரங்களும்
எத்துனை அழகாய் ஜொலிக்கின்றன
இன்னும் சூரியன் காணாத இந்த இரவு
பௌர்ணமி ஒளியில் எத்துனை அழகு

இந்த கொடிகள் எப்படிப் படர்கின்றன
மண்ணில் ஊர்ந்து மரங்கள் தேடி
கண்டபின் கட்டிப்பிடித்து சுற்றி வளைத்து
உயர ஏறுகின்றன ஆச்சரியம்.

உமியாடை ஊடுத்திய அழகியோ
அன்னலட்சுமியோ-அரிசி

ஏழை வீட்டுக் கூரையில் நூறு பொத்தல்கள்
இலவசமாய் நிலவும் நட்சத்திரங்களும்
எட்டிப்பார்த்திட பரவச யன்னல்கள்

ஏதுமற்ற நாடோடிக்கு எல்லாம் அழகு
எல்லாமிருக்கும் செல்வனுக்கு
அழகை இரசிக்க இயலா வறுமையாய்
கவலைக் குருடு.

கிளிகளுக்கு ஆகாயம் வீடு
சிறகிழந்த கிளிகளுக்கு சிறையான கூடே
அதன் புதுவீடு

அலைக்கரங்களால் அழுக்கினை கரைக்குத் தள்ளி.
கடலும் தேய்த்துக் குளிக்கின்றது

இலையுதிர்காலம்
இலைகளை உதிர்த்துவிட்டு துறவியைப்போல்
கம்பீரமாய் நிற்கின்றது ஒற்றைமரம்.
பரவிக்கிடந்த சருகுகளை கைரேகைச் சோதிடன்போல்
விரித்துப்பார்க்கிறது காற்று

காலையிலும் மாலையிலும்-என் இல்லத்தில்
கச்சேரி ஆலாபனைகள்.
உதயம் கண்டு பூபாளமிசைப்பதும்-
அந்தியில் சங்கதி சொல்லி சங்கீதமாலை தொடுப்பதும்
புள்ளினம் வாழும் என் மரவீட்டில் பூரிப்பின் உச்சம்

எச்சங்கள் என்னைத் தீண்டும்போதும்
உறங்கும் புள்ளினத்திற்கு
தொட்டிலாய் கிளைகளை ஆட்டும்போதும்
அமுதமழையில் நனையும் ஆனந்தம்

ஒற்றைத் தாமரை மலர்ந்த குளத்தில்
ஒளி வீசுகின்றது-வட்ட நிலா
பொட்டல் வெளியில்-ஒற்றைப்பனையில் இருந்து
முகாரி இசைக்கின்றது புள்ளிக்குயில்

மூடு பனி கலையாத-அதிகாலை
யார் பூசினார் வானுக்கு செஞ்சந்தனத்தை
வானும் வயசுக்கு வந்துவிட்டதுபோலும

ஊர்ந்து திரிந்து மண்ணுக்கும் மரங்களுக்கும் உறவானவன்
தூண்டில் புழுவாய் துடிக்கின்றேன்-எனக்காய் அல்ல
என்னை இரையாக்கிட வரும் மீனுக்காய்
மனிதனும், மீனும் என் விடுதலைக்கு உதவிட
பிரபஞ்சத்தில் ஒன்றாகும் பெருநிலைக்காய் என் தவிப்பு.

கூவி எழுப்பியது சேவல் தூக்கம் கலைய
பாடிப் பறந்தன புள்ளினங்கள்

புற்கள்-நசுங்காத பாதையில் என் பயணம்
நீரோடை குழம்பாமல் என் குளியல்.

வெட்ட வெளியில் பொட்டல் காட்டில் உயர நிற்கும்
ஒற்றைப் பனையில் கள் எடுக்க ஏறுகிறான் மூப்பன்
வாழ்விற்காய் நாளும் சாதித் தீயில் வேகும் இனம்
வயிற்றுப்பிழைப்பிற்காய் உயிரை பணயம் வைக்கிறது.
பனை உயரத்தில்

வாவியில் கயல்கள் துள்ளி விளையாட,
கானக்குயில் இசைபாட-வெள்ளைக்
கொக்கொன்று தாழப்பறந்திட-கரையில்
தனியே அமர்ந்திருந்தேன்
செவ்வானில் சூரிய அஸ்தமனம்
வானிலே வண்ணக் கோலம்
எத்துனை இனிமை!, எத்துனை அழகு

உதிரும் இலை ஒவ்வொன்றும் களிப்போடு ஆடி விழுகின்றன
இனி இல்லை இன்னொரு மரணம் எமக்கென்று

ஒரு பொழுதைப்போல் புலர்ந்து
ஒரு பூவைப்போல் உதிரும் வாழ்வு
எத்துணை அழகு.

மழைக்கு பச்சைக்கொடி காட்டும் வயல்வெளிகளில்
குடை பிடித்து கறுப்புக்கொடி காட்டும் மனிதர்கள்

புல்லாங்குழலுக்கு ஊதி உயிர் கொடுத்தான் கலைஞன்
உயிர்காற்றும் இசையானது.
மேளத்தை தட்டி உயிர்கொடுத்தான்
அதிர்வும் தாளமானது

தனிமையின் இனிமை -நிலவுக்கு தெரிந்ததால்தானோ
தனிமையில்-உலாவுது
அமாவாசையில் தன்னை மறைத்து
அகங்காரமழிய தியானமிருக்குது.

வீடில்லா நாடோடிபோல், க∴பாவைச் சுற்றும்
ஹஜ் யாத்திரிகன்போல்,
பூமியைச் சுற்றும் நிலவின் பயணம்.

கல்லறைத் தோட்டமெங்கும்
கலையழகு மிளிரும் உறங்கலிருக்கைகள்
வெற்றுச் சிலுவைகள் பொறித்த
கட்டாந் தரையில் ஏழைகள் உறங்கிட
கலையழகு மிளிரும் பளிங்குக் கல்லறைகளில்
செல்வர் தூங்கிட
மயானத்திலும் வர்க்கப்போராட்டம்
தொடரும் கதையானது-க∴ர்ல் மார்க்ஸ்
சொல்ல மறந்த கதையானது.

எல்லோரும் போனபின் தனிமையில் இந்த மனம்
விழித்துக்கொள்கிறது-எரிமலைபோல்
எண்ணங்களை கக்கி ஆறுகின்றது.

தபசிபோல்-ஆற்றிலிறங்கி-ஆற்றலோடு
குடையாய் வலை விரிய வீசி- சற்று ஓய்ந்து
மெல்ல இழுக்கின்றான்-பின்
கரையில் கொட்டி வலையைப் பிரிக்கின்றான்.

மீன் ஒன்றும் அகப்படாத நிலையில்
வெற்று வலையை மீண்டும் வீசி
ஒரு ஞானியைப்போல்
ஆற்றை அன்போடு பார்க்கின்றான்
நம்பிக்கை தளராத நாயகன் ஏழை மீனவன்.

இரவு முழுதும் தூங்கவில்லை-கூரைவழியே
எட்டிப்பாாத்து கதைபேசிய நிலா
பொத்தல் வழியே என்னை-கட்டியணைத்து
காதல் சொன்ன தென்றல்

“சலக்” “சலக்” துடுப்பு நீரைத் துலாவும் ஒலி
சங்கீதமாய் ஒலிக்கின்றது.-தோணி கூட கொலுசு
அணிந்திருக்கிறதுபோலும்.

வாவியில் நடைபோடும் தென்றலின்
வட்டகாலடித் தடங்கள்தான்
எத்துனை அழகானவை

இந்த குளிரை எப்படித் தாங்குவது
வீசும் குளிர் காற்றிடம். நடுங்கிக்கொண்டே
கேட்டது ஊசியிலை மரங்கள்

என்ன ஆச்சரியம்-பனியே உனக்கு குளிரவில்லையா?
தீயே உனக்கு சுடவில்லையா?

இந்த நிலவு கூட வெளவால்போல்- ஏன்
இரவில் விழித்து பகலில் தூங்குகிறது.

இந்த குப்பையெல்லாம் கவிதைகள் என்று யார் சொன்னது?
கவிதை பற்றி தெரிந்தால் கவிதைபற்றி பேசுவோம்-பின்
இந்தகுப்பைகளை
கோழிகளாய் கிளறிப்பார்ப்போம்.

நீரின்றிக் காய்ந்த புற்தரை அமைதியில் ஆழ்ந்து கிடக்க
செயலற்று ஓய்ந்திருக்க-மழைக்காலம் வந்தது
காய்ந்த புற்தரை தானாய்ப் பசுமை பூண்டது

பொன் முட்டையிடும் வாத்துக்களை வெட்டிப் பார்க்கும்
முட்டாள் போராளிகளே நீங்கள் பயணம் செய்யும்
"இந்த கப்பக்குதிரையின்" கால் ஊனமென்றும் தெரிந்தும்
ஏன் ஓட ஓட விரட்டுகின்றீர்கள்

அந்திவானில் அள்ளித் தெளித்த கறுப்பு புள்ளிக்கோலங்களாய்
அசையும் காக்கை கூட்டம் நெஞ்சைக் கொள்ளை கொள்ள
ஓடி வந்த நாய் ஒன்று நின்று குனிந்து
மின்சாரக் கம்பத்தை மோப்பமிட்டு பின்னங் காலை உயர்த்தி
சாவகாசமயாய்-சிறு நீரால் எல்லைக் குறியிட்டு
வேகமாய் ஓடிப்போனது?

இந்த மரங்கள் கூட மங்கையர்போலும்
பருவம் வந்தபோது பூச்சூடி அலங்கரிப்பதும்
கனிகள் சுமந்து தாய்மையடைவதும்
இலைகள் உதிர்த்து கைமை பூனுவதும்
காலத்தின் கோலமோ?

அன்னையின்றித் தந்தையின்றித் ஆனந்த சொந்தமின்றி,
அரிய நட்பின்றி காதல் உறவுமின்றி வாடுகின்றேன்
தனியனாய் இறைவா-உன்னையன்றி
எனக்கு வேறு துணையில்லை, என்னை மறவாதே
என் தந்தையே என் இறைவா?

காற்றும் மேகமும் கலந்து வரைந்த
கறுப்பு வெள்ளைச் சித்திரங்களுக்கு
வண்ணம் தீட்டுகிறது அந்திக் கதிரவன்
வானக் கலையகத்தில்-நாளும்
வண்ணச் சித்திரக்கண்காட்சி-அழகின் மாட்சி.

தொலைவில் கறுப்பு மரத்துண்டயாய்
மிதந்துபோகின்றது ஒரு தோணி

சிந்திக் கிடந்த மேகத்துண்டுகளைச் சேர்த்து
தென்றல் கோலமிட அந்திக் கதிரவனும் வண்ணம் பூசிட
வானக்கலையகத்தில் வண்ணமும் வடிவமும் மாறும்
கலைக்கோலங்கள்.

இந்த கறுப்பு குளத்தில் இத்துனை வெள்ளிப் பூக்களா?
மேகத்துகில் விலகிட சிறிதும் வெட்கமின்றி நீந்தி விளையாடும்
இந்த வெள்ளிப்பந்து பூவா இல்லை பூவையா ?
அண்ணாந்து பார்த்து அதிசயித்தது அல்லிப்பூ

ஆனந்த மழை பொழிந்து
கார்மேகம் பூமிகாவை அணைத்திட,
செம்புலப்பெய் நீர்போல் மனம் ஒன்றிக் கலந்திட,
அந்திச்சிவப்பை பூசி-ஏன்
இந்த வானம் நாணுகின்றது?

வண்டு கறுப்பென்பதால்-எந்த வண்ணப்பூக்களும்-அதை
“தீண்டாதான்” என ஒதுக்கி வைக்கவில்லை
கொடுக்கு உண்டென்பதால் தேனீக்கள் எந்த பூக்களையும்
அடக்கி ஆள்வதுமில்லை, வல்லாங்கு செய்வதுமில்லை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-04-2023

சித்தன்ன வாசல் மோகினி

கொலுசும், வளையல்களும் கட்டியம் கூற,
கோவைச் செவ்வாய் குறுநகை தூவ
அன்ன நடையும், ஆடிவரும் பின்னலும் புதுநாட்டியமாக,
வட்டவிழிகளும், சின்ன இடையும் அழகின் பட்டயமாக-இவள்
கண்ணகியும், மாதவியும் இணைந்த காவியமோ?

காதற் சுழலில் சிக்கிய காகிதப் படகாய் இதயம்
மோகப்புயலில் சிக்கிய முனியாய்-உள்ளம்.
காமினியோ, என்னை ஆட்கொள்ள வந்த
சித்தன்னவாசல் மோகினியோ, முத்து நகை சிந்தி
நான் மயங்கிட நடந்து வந்தாள்

எண்ணம்தான் மதுவுண்ட வண்டாய் மயங்கிட-மேனி
வண்ணம்தான் நாணிச் சிவந்து காதல் கனியைக் காட்டிட,
பின்னும் கால்கள்தான் போகும் வழியறியாமல் தடுமாறிட
முல்லை எழிலாள், முத்து நகை தூவினாள்

பூமேனி வாசம் சுவாசத்தை நிறைத்திட
பொன்மஞ்சள் நிலாமுகம் இதயத்தைப் பறித்திட
கொழுகொம்பே என்னைப் படரவிடு எனக் கொடியுடல் கெஞ்சிட
கண் பட்ட காளை நெஞ்சம் காதல் புண்பட்டு வாடியது

பாயும் ஒளி கண்ணம்மா நீ எனக்கு
காதல் பல்கலைக் கழகமடி
காதல் வேதமடி- செல்லம்மா -நீ எனக்கு
என் நெஞ்சின் தீராக் காதல் தாகமடி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

தமிழினி

நிலவோ பெண்ணாகி என்முன் இருக்க,
மனமோ, மலர்வனமாய்ப் பூத்துக் குலுங்க
கொவ்வை இதழ்களின் செந்தூரச் சிவப்பு-என்
நெஞ்சை கொள்ளை கொள்ளும் பேரழகின் இருப்பு

அள்ளிக்கொள், என்னை இறுக அணைத்து "கொல்"
எனச் சொல்லும் பூவுடல் வாசம் சுவாசத்தை நிரப்ப,
வண்ண நிலவொன்று வந்தது என் வானத்தில் இன்று
வாச மலரொன்று இதயப்பூவனத்தில் பூத்தது இன்று.

மோகனப் புன்னகை மலரும் போதெல்லாம்
மாயமாய் மறையும் பூவிழிகள்,
கொஞ்சிக் கதைபேசும் போதெல்லாம்
பஞ்சவர்ணகிளியின் காதல் நிலைகள்.

வேல்விழிகளால் விழுந்த நெஞ்சம் காதலாகித் தவிக்க,
பேச தவித்து பேசியதும், பார்க்கத் தவித்து பார்த்ததுவும்
அன்பின் அதிசய அநுபவங்களாகப், பல மணிநேரமும்
சில நொடிகளாக கழிந்த மாயம்தான் என்னே!

இதழ் கள்ளோ அருந்து பெருவிருந்து என்றழைக்க,
இவள் கயல்களோ நெஞ்சில்-காமன் கணையைச் சொருக
பூ விழிப்பார்வை தழுவும்போதெல்லாம் நெஞ்சிலே பரவசம்
காதல் பூத்த நெஞ்சிலோ ஆனந்த நவரசம்

விழிகளில் குவளை பூத்தாட, மொழிகளில்
காதல் கூத்தாட-பார்த்தாலே காதல் போதையூறும்-
பாவையிவள் கள்ளோ, கனிரசமோ? என் நெஞ்சைக்
கவர்ந்த காதல் கன்னி அழகின் அதிசயமே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-25-09-2023

தனிமை

என் வரவிற்காய் வழிமேல் விழி வைத்துக் காத்திருக்க
எந்த மைவிழிகளுமில்லை,-நீர் தந்து,
நெஞ்சுற்ற விடாய் தணிக்க எந்தப் பூக்கரங்களுமில்லை,
தலை சாய்த்துக் களைப்பாற எந்தப் பூ மடியுமில்லை,
பசிபோக்கிட அமுதும், பிணிபோக்கிட மருந்தும் ஈந்து
எனைச் சீராட்ட அன்புத் தாயுமில்லை.

என் தனிமை நோய் தீர்க்கக் காதலுமில்லை
என் கவிதைக்கு ஒரு இரசிகையுமில்லை
ஏகாந்தம் என் குடியிருப்பானது.
எழில்மிகு தனிமை என்னை ஆட்கொண்டது.

இறைவா உன் அடிமை நான் என்றே மனம்
மகிழ்வு கொண்டது-எல்லாம் உன் செயல் என்றே
அமைதி கண்டது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

தர்மம் எங்கே?

முள்ளில்லாத ரோஜாவோ-
பெண் யாரும் பறிக்க?-முகவரியில்லாத
மடலோ-இவள் எவரும் படிக்க?

வெள்ளித் திரையரங்கில்-விபரீதச் சூதாட்டங்கள்
துரியோதனனுக்காய்-துகில் கலைந்திடும்
புதிய திரௌபதிகளுமிங்கே-மதுவிற்காய் மாதவியின்
சிலம்பை அடகு வைத்திடும் கோவலனுமிங்கே

வறுமைக் காட்டில்-புதிய வனவாசங்கள்
மத்திய கிழக்கில் பொன்மானைத் தேடிடும்-இராமன்
வறுமைக் கோட்டைத் தாண்டி
இராவணனை சிறைப்பிடிக்கும் சீதை

காமவெப்பத்தை கணக்கிட முடியாமல்
தடுமாறும் வெப்பமானிகள்-போதை வஸ்து
கற்பழிப்பு. சிறுவர் துஷ்பிரயோகத்தை
பிரசுரித்து நாறும் ஊடகங்கள்

நீலப்படங்களோ மோகச் சினிமாக்களாய் மாறிட
காமத்தீயணைக்க பாயும் சுக்கில வெள்ளங்கள்
யோனிக்காடுகளை-இலிங்கக் கலப்பைகள் உழுதிட
காமபோக விவசாயம் இந்திர வைபோகம்

சிறுவர் துஷ்பிரயோகம் சிருங்காரக் கலையாகிட
புதிய வேதமாய் காமசூத்திரங்கள்
இந்திரனாய், சந்திரனாய், யயாதியாய்
விகாரமடையும் மானுடம்

ஆடைக்குறைப்பிற்கு கவர்ச்சி அந்தஸ்து
சிவப்பு விளக்கிற்கோ பலத்த பந்தோபஸ்து
காமச்சாமிகளின் மன்மத வேள்வியில்- ஆகுதியாய்
குருத்துகளும், கொடிமுல்லைகளும் வெந்திட,
தாலிகள் அறுந்திட-வெருளிகளும் பயிர்களை மேய்ந்தன.

காமலிற்றா, திருமதி விஜிகலா நாதகண்ணன்
திருமதி சிவமணி வீரக்கோன்-பாலியல்
வன்முறைப் பட்டியலின் புதிய இணைப்புக்கள்

காமுகத் துச்சாதனர்களுக்கு காவலர் விருதுகள்
கண்ணணைக் கதறியழைத்த-பாஞ்சாலி
அம்மணமான அவலங்கள்
நீதிகேட்ட கண்ணகிக்கோ அநியாயத் தீர்ப்பு
பாரதி கண்ட புதுமைப்பெண்களுக்கோ
புலிப்பயங்கரவாதிப் பட்டமளிப்பு

ஹம்சனின் கரங்களில் செங்கோல்
குருட்டுத்தேவதையின் கையில் -நீதித்தராசு

எம்மைக் காப்பவர் படையினரோ?
பாலியல் வன்முறை வல்லுனரோ?
காவல் துறையினரோ-இல்லை
காமத்துறையினரோ யாரறிவார்?

மதுரையை எரித்த கண்ணகி எங்கே?
மனம் நொந்து தீக்குளித்த சீதை எங்கே?
ஈழம் எரிகின்றது
கண்ணகியும் இங்கே -சீதையும் இங்கே

மாண்ட கோவலனும் தேவலோகம் போகலாம்
காடு மீண்ட இராமனும் சிம்மாசனம் ஏறலாம்
கண்ணகிக்கும், சீதைக்கும்
கண்ணீரும், காடும்தான் சொந்தமென்றால்
தர்மம் எங்கே? நீதி எங்கே?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-13-04-2023

தவிப்பு

கனிமொழியும், மலர்விழியும் காதல் சொல்ல,
அன்ன நடையும், சின்ன இடையும் கவிதை சொல்ல,
பூ முகமும், கார்குழலும் வான் நிலவைக் காட்ட,
புன்னகையும், நாணமும் பெண்மையின் அழகைக் கூட்ட,
பெண்ணாகி வந்த பேரழகோ புதுக்கவிதை சொல்ல,
கண் பார்த்து நெஞ்சு எழுதியதோ காதல்கவிதை.

என் உயிரும் மெய்யும் ஒன்றாய்க் கரையக் கண்டும்
அவள் உள்ளம் உருகவில்லை,-என் இதயமும்,
உதயமும் கண்ணீரால் நனையக்கண்டும்
அவள் நெஞ்சம் இளகவில்லை?

காதல் ரோஜாவால்-காயமான இதயம்
காதலியாள் மௌனராகத்தால்
கருகிடும் காதல் நெஞ்சம்

என் விழிகளில் வடிவது-கண்ணீர் அல்ல
உருகும் என் இதயமடி.
என் மொழிகள் சொல்லுவதும் -கவிதையல்ல
உயிர்க் காதலடி

கரையும் கார்மேகம்போல் உருகுகிறேன்
நீ காணவில்ல
இரையும் கடல் அலைபோல் தவிக்கின்றேன்
உன் நெஞ்சம் இளகவில்லை-ஏனோ?

கண்ணீராய் கரைந்து உருகும் இதயம்,
காதல் தஞ்சம் கேட்க-என்
காதற்கோயிலின் தேவதையோ-கற்சிலையானது.
எண்ணம் வரைந்த ஓவியமோ
வண்ணம்கலைந்திட, இதயம் பாடிய கீதமோ
செவிடன் காதல் ஊதிய சங்கானது.
காதல் நூலறுந்த பட்டமானது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

தேவ ராகம்.

பூங்குழலும், மலர் முகமும் என்னை மயக்கிட,
வேல்விழிகளும், கனிமொழிகளும் நெஞ்சைக் கலக்கிட,
வான்நிலவோ வண்ணப்பூச்சூடி உலா வந்தது
கவிபாடப் பொருள் தந்தது

என் காதல் கவிதையாய் மலர்ந்தவளே-காதலை
என் நெஞ்சுக்குள் முளைக்க வைத்தாள்
தனிமையில் வாழ்ந்தவனுக்கு வண்ணங்களால்-காதலின்
இனிமையைச் சுவைக்க வரம் கொடுத்தாள்

உன்னைக் காணும்வரை என் விழிகளுக்கோ-பார்வை இல்லை
உன்னோடு பேசும்போதோ என் மொழிகளிலோ கவிதை
உன்மொழி கேட்டபின்னர்-இன்னிசையும் சத்தம்
உன் நினைவோ என் இதயம் சுவைக்கும் அமுதம்

என்றும் மலர்ந்திடவோ-இறைவன் உன்னை
என் இதயத்தில் விதைத்தான், வாடிய மனமும்
வண்ணப் பூஞ்சோலையாய் பூத்திடவோ-இன்று
காதலை இதயத்தில் துளிர்க்க வைத்தான்

காதல் சொல்லத் தயங்கியதும்-கண்மறைந்து போனதுவும்
பொன்மானைத்தேடிய கதையாகிட,
ஈரேழு ஆண்டுகள் போனபின் -அன்புக்குரல் கேட்டதுவும்
கண்ணில் நீர் வடியக் கதைபேசி மகிழ்ந்ததுவும் நிஜமானதே

நள்ளிரவில் ஒலித்தது தேவகானமோ?-என்னை
நனைந்திடப் பொழிந்தது தேன்மழையோ?
எனை மயக்கியது பூங்குயிலின் இன்னிசையோ?
மனம் பருகியது காதல் கனிரசமோ?

உள்ளத்தில் பொங்கியது ஆனந்த வைகையோ?
வெள்ளமெனப் பாய்ந்தது தேன் கங்கையோ?
தொலைபேசியில் அழைத்தவள் தேவமங்கையோ?
அன்பால் மூழ்கடித்தவள் காதல் கங்கையோ?
சொல் மனமே சொல்

இசை கேட்டேன்-கானக்குயிலோ வெகுதொலைவில்
மணம் நுகர்ந்தேன்-வாசமுல்லையோ மலைமுகட்டில்
கண்பார்த்தேன்- தேனிலவோ வான்வெளியில்
அன்புமொழி கேட்டேன் காதற்கிளியோ-என் இதயத்தில்

நித்திலமே, என் நெஞ்செழுதும் அன்புக் காவியமே
கத்தும் கடல் ஏழும் வற்றிக் காய்ந்தாலும்-
வானூரும் நிலவும், தேனூரும் மலர்களும் வாழும்வரை
என் நெஞ்சுற்ற நேசம் மாறாது மறையாது
என் மனம் கொண்ட காதல் வாடாது, உதிராது

இதயங்கள் கலந்த அன்புறவே காதல்
இதயங்கள் பூண்ட இன்பத் துறவும் காதல்
இன்று வாசமில்லாக் காகிதப் பூக்களின் நடுவே
தேனி என் வனவாசம்-அன்பே பாசமில்லா
இதயங்கள் நடுவே உன் காதற் சிறைவாசம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

தோற்றங்கள்

பார்வையோ, தென்றலாய் என்னைத்தழுவ,
பார்த்தாலே இனிக்கும் தேன்இதழ்களோ
நெஞ்சில் காதல் போதையை ஏற்ற,
மலர்மேனி வாசம் சுவாசத்தை மயக்க.
மயக்கும் புன்னகை மோகனம் இசைக்க,
நெஞ்சிலோ பூமழை, நினைவிலோ கவிதை அலை

வருவது யார் தேவதையா இல்லை மோகினியா?
மனம் மயங்க, நூலிடையோ நெஞ்சை நோகடிக்க,
அன்ன நடையோடு பின்னல் அசைந்தாட,
காமன் படையெனவந்தவள்-வேல் விழிகளால்
என்னை வீழ்த்தி- கனிமொழிகளால் சிறையெடுத்தாள்-

அழகில் இவள் தேவதையோ?
அன்னநடையில் இவள் காதல் நர்த்தகியோ?
நாளும் என்னைக் கனவிலும் வருத்திடும்
காதல் தேன் நிலவோ இவள்?
நெஞ்சே நீ சொல்

துருவங்கள் மறைந்தாலும்,பருவங்கள் மாறி வந்தாலும்
வானவில்லின் வண்ணங்கள் அழிந்தாலும் -அன்பே
உன்மீது நான் கொண்ட காதல் ஒருபோதும்
மாறாது மறையாது.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

உமையாள் காதல்





கல்லூரிப் பொருட்காட்சியில் துடிக்கும் இதயத்தை
காட்சிப் பொருளாக்கி கன்னி நான் விளக்கி நின்றேன்-
காதலால் என் இதயத் துடிப்பை இரட்டிப்பாக்கி
என்னையே காட்சிப் பொருளாக்கி-இதயம் திறந்து
தம் காதலை விளக்கினார் என் காதலர்

நீ இல்லாத உலகோ நிலவில்லாத வானம்-
நீ இல்லாத மனமோ பூவில்லாப் பாலை வனம்
நெய்யின்றித் தவிக்குதடி என் மணி விளக்கு
காதல் கதிரின்றித் தவிக்குதடி உன் கிழக்கு

பொருட் காட்சி பார்க்க வந்தவர்க்கு-நானோ
அருங்காட்சியானேன்-இதயங்கள் இடம்மாறிட
காதல் அருங்காட்சியகத்தில்-காதலர்
நாங்களே பொருட்காட்சியானோம்



கண்டு துடிக்கும் இதயம், காணாதபோது ஏங்கித் தவிக்கும்,
பார்த்து மகிழும் விழிகள், பாராதபோது, அந்தகிபோல்
பரிதவிக்கும்,-பாலும் கசந்திட, பஞ்ணையும் நொந்திட,
பாவை நெஞ்சிலோ காதல் சுரம், நினைவிலோ தீச்சுரம்.



பௌதிக வகுப்பறையில் நேர்-எதிர் காந்தமுனைகளாய்
காதல் புலத்தில் சிக்கிய இதயங்கள் பேச மொழியின்றித் தவிக்கும்.
ஊசலைப்போல் இடம் வலமாய் ஆடித் தவிக்கும் இதயம்
அவர் தோள் சாய்திட ஆசையாய்த் துடிக்கும்.

வடக்குத் தெற்கைக் காட்டும் காந்த ஊசியாய்
அவரைத் தேடித் துடிக்கும் கருவிழிகள்-கண்டதும்
காதல் புலத்தில் இன்புற்றுத் தன்னை மறக்கும்

என் “உலகோ” அவராக, அவர் “நிலவோ” நானாக,
காதல் ஈர்ப்பு விசையால் ஒருவரை ஒருவர் பற்றி நிற்கும்
காதல் கோள்களாய் காதல் வானில் நாங்கள்.

-***ஜஸ்டின்*** “Just-in” ஆய் என் நெஞ்சுக்குள் நுழைந்து
“அமிர்தயோகமாய்க் காதல் தந்திட ஆனந்தம்
என் நெஞ்சை கொள்ளை கொண்டவர் “இராஜ இந்திரன்”
என்றறிந்திட பூமகள் உள்ளத்திலோ பேரானந்தம்



உமாபதியால்-நெஞ்சுக்குள்-காதல் தாண்டவம்
உமாபதி சிவனாய்க்-காட்சி தர
கன்னி மனசுக்குள்-கோடி வேண்டுதல்
கன்யா குமரியாய்த் கடும் தவம்

தபால்காரரோ காதல் தூதனாய்த் தோன்றிட, கடிதங்களுக்காய்த்
தவமிருக்கும்-சில நொடியும் பல யுகங்களாய் வருத்தும்
கடிதங்கள், தாயின் கையில் சிக்கும்போதெல்லாம்-கண் கலங்கும்
களவாய்ப் படிக்கும் போதெல்லாம் காதல் மழையில் இதயம் நனையும்

சைக்கிள் மணியோசை காதல் மணியோசையாய் ஒலிக்க
வீட்டைக் கடந்து செல்லும் காதலர்-காணத்
தவித்துக் கண்டிட-களிப்பால் நெஞ்சு நிறைந்திட
காதலர் தினம் கொண்டாடும் தேன்மலர்

மதம் கடந்து, மனம் கலந்த காதலும் பூவாசம் வீச-
அன்பே சிவம் என அனுபூதியில் கண்ட பெரியோருக்கு
ஆனந்தம் பொங்கிட எங்கும் சச்சித் ஆனந்தம்

உமையவள் பிள்ளை கணபதிக்கோ நான் செல்லப் பிள்ளை
தாய் கண்மணிக்கோ- கண்ணின் மணி நான்
மாதாகோயில் மணி ஒலிக்க-மங்கலமாய்ப், பெற்றோர்
பெரியோர் ஆசி கூறி வாழ்த்திட மாலை சூடிய மணநாள்-
மங்கை என் வாழ்விலோ திருநாள்



இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
(லோக சமஸ்தா சுகினா பவந்து)
எல்லாப் புகழும் இறைவனுக்கே

To my Teacher-& Sir, with love
Pax.Ravichandra-29.07.2016

உருகும் விழிகள்

உருகும் விழிகளுக்குள்-கரையாத சோகம்
துருவப்பனியாய் உறைந்திருக்கும்,
எரியும் மனதில், கருகாத துயரம்
எரிமலைக் குழம்பாயக்-கொதித்திருக்கும்

உயிர்க் காற்றில் சோகம் பெருமூச்சாய் வீசிட,
உயிரும் மெய்யும் மெழுகாய்ச் சோக நெருப்பில் உருகிட
கண்ணீர் சிந்தும் விழிகள்
கனலாய் நெஞ்சை சுட்ட காதலியாள் மொழிகள்.

அன்னையிழந்த அன்பு நெஞ்சம்
அநாதையாகித் தவிக்கும்-
நீரோடை தேடும் மானாய்- பாலையில்
அன்பைத்தேடி அலையும்

கதைபேசி உறவாட யாருமின்றி
கவலைச் சுமை இறக்கிட சுமைதாங்கியின்றி
அன்பை பகிர்ந்திட-இதயம் இன்றி-தனியனாய்-
அன்பிற்காய் தவமிருக்கும் அநாதை மனம்

கானல் நீரான காதலுக்காய்-நெஞ்சம்
கண்ணீரில் கவிதை எழுதிச் சோகம் தணிக்கும்,
எல்லாம் மாயையாகிப்போன வாழ்வில்
மரணம் நிம்மதி தரும் அருமருந்தாகும்
இதுதான் விதியோ? இறைவா உன் வழியோ?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

வைரம்

மண்ணில் கிடந்தேன்-வைரமென
பொன் மனதில் சூடி மகிழ்ந்தாள்
கடலில் கிடந்தேன்-முத்ததென
பெரும் சொத்தாய்ப் போற்றி மகிழ்ந்தாள்

அன்பே உன்னைப் பிரிந்தபின்-
கண்ணாடிக் கல்லாய் களையிழந்த நெஞ்சம்
சோகக் கறையான் அரிக்க
ஒளியிழந்த முத்தாய் உன் காதல் அஞ்சுகம்

கங்கையும், காவிரியும் கண்களில் வடிய
காட்டுத்தீயாய் நெஞ்சில் சோகம் எரிய, சோகப்புயல்
வாட்டும் பூவனமாய் காளை நெஞ்சம்
முட் படுக்கையாய் மாறிட்ட பாவை மஞ்சம்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

வள்ளலின் காதல்

கொழு கொம்பில்லாத முல்லையாய் வழியில் கிடந்தாள்,
பாரி வள்ளலாய்-என் இதயத்தேரில் படரவிட்டேன்,
காதல் குளிரில் கானமயிலாள் நடுங்கித் தவித்தாள்-
பேகனாய், இதயப் போர்வையை ஈந்து மகிழ்ந்தேன்

வன்பரணனாய் காதல் வறுமையில்
வாடித் தவித்தாள்-நள்ளியாய்
ஆரமும் கடகமும்
அமுதும் காதலாய் ஈந்து மகிழ்ந்தேன்.

இன்றோ என் ஈகையும் பொய்யாகி
என்னவள் காதல் இதயமும் கல்லாகி-
சூட நின்ற காதல் வாகையும் கனவாகிட
தேவதாஸாய் மாயையில் வாடுகின்றேன்

காதல் இல்லா வள்ளலும் கன்னியின் நெஞ்சை இரந்த ஏழையானேன்,
நீர் பூத்த விழிகளும், நெஞ்சம் புனைந்த கவிதையும் வஞ்சியை வருத்த
நெஞ்சை கவர்ந்தவளோ, நேசம் தந்தவளோ கலங்கிநின்றாள்,
காதலை இரந்தவன் காலடி தொழுதே பிழை பொறுங்கள் என்றாள்.

இரந்து பெறும் காதல் வேண்டாம்-என் இதயம்
கவர்ந்து வரும் காதலை என் நெஞ்சம் உணரக் கண்டேன்
ஏழை என்னை வாழவைக்க காதல்
இதயத்தை ஈந்த வள்ளலைக் கண்டேன்,
காதல் கொண்டேன் என்றாள்.

வள்ளலிற்கும் காதல் வரம் தந்த தேவதையின் வாழ்வு மலர,
முல்லைக் கொடியில் ஆயிரம் மலர்கள் பூக்க, கானமயிலும்
ஆடி மகிழ்ந்திட, மாரிமழையாய் நெஞ்சில் காதல் மழை-
எங்கும் ஒலிக்கும் சோடிக்குயில்களின் ஆனந்த இசை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

வள்ளி முருகன்

வெள்ளியன்று பள்ளியிலே உன்னைக் கண்டேன்
வீடு போனபின் கண்டுகொண்டேன்
என் நெஞ்சைத் திருடிய கள்ளி நீதான் என்று

உன்னை எண்ணி என் ஆவியும் வேகுதடி
வள்ளி வருவாயோ-காதலை கனிரசமாய் அள்ளித்
தந்தே வள்ளி முருகனாய் ஆவாயோ
தனிமையில் ஏங்கி நின்றேன்

சொல்ல நினைத்த காதல் ஏழ்மையால்
ஊனமானது, சொல்லாத காதல் ஊமையானது,
கன்னி மனம் சேராத மடலானது

காலங்கள் போனபின்பும் மாறாத முதற் காதல்
ஒரு தலைராகமானது, கன்னியோ கண் மறைந்த
சோக நிகழ்வானது, நெஞ்சில் உதித்த முதற் காதல்
முள்ளும் மலருமானது, வாழ்வு இன்பமானது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

வாழ்வும் சாவும்

காதல் தீயில் வெந்து நெஞ்சம் புண்ணாக,
கண்ணீர் மழை பொழிந்து விழிகளும் நெருப்பாக,
கவிதை பூக்கும் மனதில் சோகக் காளான்கள்
உவகை மலரும் உள்ளத்தில் உப்பு நீருற்றுகள்

பிரியமே
உன் பிரிவோ எனக்குப் பெருந்துன்பம்
உன் இருப்போ என் பேரின்பம்

நினைக்கத் தெரிந்த எனக்கு -உன்னை
மறக்கத்தெரியவில்லை-நேசிக்க தெரிந்த எனக்கு
உன்னை வெறுக்கத் தெரியவில்லை.

உன்னைக் காணாமல் என் கண்களுக்கோ-ஒளியில்லை-
உன் கனிமொழி கேளாமல்
என் கவிதைகளுக்கோ உயிரில்லை.

வாழ்வும் சாவும் காதலே உன்னால்
உனக்காய் வாழ்வதும் காதலே
உன்னால் சாவதும் காதலே

அன்பே! நீயின்றி என் வானுக்கோ நிலவில்லை
உன் மலருக்கோ மணமில்லை
என் காதலுக்கோ உயிரில்லை
என் வாழ்வுக்கோ துணையில்லை.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

வாமனன் வரம்

மாவலி மகள் செய்த காதல் யாகத்தில்
வாமனன்போல் வரம் கேட்டேன்,

கன்னி மனதில் என் விழிகள் காதல் விதை தூவிக்களிக்க,
காதல் மழை தூவிக் காமன் கன்னி நெஞ்சைக் குளிர்விக்க,
காதல் துளிர்விட்ட கன்னி மனதை காதல் சுரம் பற்றக்
பாசுரமாய்க் வஞ்சியும் காதல் வரம் தந்தாள்.

விழியோடு விழிகலந்து,
விழிமயக்கும் மெய்யை விழியளந்து மயங்க,
விழி வழியே உயிர் நுழைந்து, உயிரோடு உயிர் கலந்து
உயிர் கவர்ந்த காதலில் மனம் மயங்க,
உயிர் மெய் கடந்த காதலில் கன்னிமனதும் காளை மனதும்
ஒன்றாய்க் கரைந்து போனது
தவமும், வரமும் கடந்துபோனது.

திருமகளும் மனமுவந்தே காதல் வரம் தந்திட
காதலில் கரைந்து மனமும் மகிழ்ந்திட
என் நெஞ்சுக்குள் மறைந்தே-இன்றும்
கானம் பாடும் காதல் குயிலாய்
மன்னன் மாவலியின் திருமகள்

கண்பார்த்து, மெய் மறந்து, மனம் கலந்து
காதலாகிக் கரைந்து போயிட
வஞ்சி மனதை வரமாய்க் கேட்டேன்
வரம் தந்தே என்றும் கலையாத
காதல் தவம் தந்தாள் காதல் தேவதை.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

வன மோகினி

கண்டதும் -நெஞ்சில் கவிதை தோன்றும்-
காதல் தேனூறும்-இதயம்
பூம்புனல்போல் பொங்கிப் பிரவாகிக்கும்

கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் அள்ளிக் கொள்ளவா
ஒரு பூவாய் உன்னை சூடிக்கொள்ளவா எனச் சொல்லி
தென்றலில் ஆனந்தக் கூத்தாடும்

மூன்றாம் பிறை சூடிய முழுநிலாவாய் நெற்றிப்பொட்டு
கண்களை மயக்கிட-கள்ளமாய்க் கயல்விழிகளோ
நெஞ்சைத் தழுவி காதல் மொழி பேசிட
பூமகள் பொன்மேனி தழுவித் தென்றலும் வாசம் வீசிட
இவள் மெய்யிலோ ரோஜாவின் வாசம்
உயிரிலோ மனதை மயக்கும் காதல் சுவாசம்

பட்டு கன்னங்களில் பவளம் மின்னும்-பூஞ்சிட்டின்
கனிமொழிகளோ முக்கனிச்சாற்றின் சுவையை மிஞ்சும்,
சுட்டும் விழிச் சுடரில் காதல் ஒளி வீசும்,
பூமுகத்தில் வெட்கப் புன்னகை மலரும்போது
பொன்மேனியில் நாணம் வண்ணக்கோலமிடும்

செவ்விதழ் மதுவோ-பருகிக்கொள் காதல் விடாய்
தீர்த்துக்கொள் எனக் காமன் விருந்துக்கு அழைப்பு விடுக்க,-
கொஞ்சி அருந்தவோ, கவ்வி அருந்தவோ என மனம் மயங்கியே
கவ்வினால் நோகுமோ, கொஞ்சினால் வலிக்குமோ
கொவ்வை இதழ்களை எண்ணிக் காளை நெஞ்சம் வாடித் தவித்திட
என்னைத் தன் நெஞ்சில் ஒரு பூவாய்ச் சூடிய வனமோகினி

நடையிலோ அன்னம் தெரிய-சின்ன இடையிலோ
காதல் கொள்ளவா இல்லை கட்டிப்போடவா?
என காஞ்சி கவிதை சொல்ல
காமனும் வாடினான் இவள்மேல் காதல் கொண்டு
கம்பனும், கவி காளிதாஸனும் மகிழ்ந்தார்
கவிபாட தேடியும் காணாத அழகின் இலக்கணம்
கண்களில் தென்பட்டதே என்று.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

தமிழ் இனிது

கொவ்வை இதழ்களோ கவ்விகொள் காதல் மதுவை அருந்திக்கொள்
“முத்தமழையில் நனைந்து கொல்”எனச் சொல்லாமல் சொல்ல
உலாவந்த புது நிலவோ கட்டிக்கொள்- என்னை இறுக அணைத்துகொள்
ஒரு வீணை போல் மீட்டிகொள் எனக் கண்களால் காதல் சொல்லியதே

பொன்மேனி வாசம் சுவாசத்தை மயக்க-வண்ணப்பூவாய
மலர்ந்தவள் வாசப்பூவாய் என்னைச் சூடிக்கொள்ள,
துள்ளிக் குதித்த என் மனமோ -தோகைவிரிய
கலாபமயிலாய் காதல் மழையில் ஆடி மகிழ்ந்ததுவே

முத்துப் புன்னகை மலரும்போதெல்லாம்
இமை மூடும் சின்னப் பூவிழிகள்
இதயத்தைக் கொள்ளை கொள்ள
வேல் விழிகளில் புள்ளிமானாய் விழுந்த நெஞ்சம்-பூமகள்
தேன்மொழிகளால் காதல் போதை கொள்ள
பார்த்தாலே போதையூறும்-பாவையிவள்
வான் மலரோ? தேன் நிலவோ? கனிரசமோ?

கொவ்வையிதழ் தேனைப் பருகினாளோ
காதல் போதை தீரப் பல பருவம் போகும்
மனம் சொல்லி மகிழ- விழிமொழியும்
இதழ் சுவையும் இன்பத்தமிழாய் போதையூட்ட
யாரிவள் தேவதை காதல் நெஞ்சே நீ சொல்?

அழகோ என்னுயிரைக் கொல்ல
மொழியோ முத்தமிழாய் மனதை வெல்ல
யுகங்களே கணங்களாகி மறைந்திட
காதலாகிக் கரைந்த நெஞ்சம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

வாவிக்கரைத் தேவதை

இடை தாண்டி, நடையோடு நர்த்தனமாடும் மலர்க்கூந்தல்
மனதைச் சீண்ட-அன்ன நடையோடு-காமன் படையென
முத்துப்பல்லும், மோகனப் புன்னகையும்,
நெற்றிச்சுருளும், நீள்விழிகளும்-காதல் கொள்
என மனதை தூண்ட மயங்கி நின்றேன்

மின்னல் இடை கண்களைப் பறித்திட,
ஆடை சூடிய காமத்துப்பாலோ இவள், பருகிக்கொள்,
காதல் விடாய் தணித்துக் கொள் என இதயம் வேண்ட,
பொட்டு வைத்த வட்ட நிலா-உலாவர, உன் நெஞ்சில்
கொஞ்சம் இடம் தருவாயா எனக் கெஞ்சியதே

குமுத இதழ்கள் விரிந்து அமுதப் புன்னகை பொழிய
கயல் விழிகளால் நெஞ்சைக் கவ்விக் கொள்ளையிட்டு
தூண்டில் மீனாய் நெஞ்சைத் துடிக்கவிட்டாள்
வாவிக்கரையில் உலா வந்த காதல் தேவதை

கொள்ளை போன நெஞ்சிலோ-காதலின் பல்லவி
காதல் கொள்ளைக்காரி இதயத்திலோ
எதிரொலியாய் இனிய அனுபல்லவி

காமன் கணையென வேல்விழிகள் பாய,
காதலால் புண்பட்டுக் காளை நெஞ்சம் சாய,
காதலுக்கு மருந்தாய்- பூவுடலை அள்ளிக்கொள்
கொவ்வாய் இதழ் அமுதம் பருகிகொள்
விருந்தென என்னை அணைத்துக் “கொல்”- என
கொடியிடையும், கயல்விழிகளும் கெஞ்ச,
காதலால் மலர்ந்த வண்டார்க்குழலி-காதல் பூச்சூடி
கன்னக்குழி பூக்க புன்னகைத்த பூங்குழலி

என் ஆவியை கொள்ளை கொண்டவள் தேவதையோ?
வாவியின் மோகினியோ என மனம் மயங்கிட
புன்னகைத்தேன்-பூங்குழலியின் காதல் வலையில்
புள்ளிமானாய்ச் சிக்குண்ட காதலன் நான்.

காதல் காயத்துக்கு -தேவதையும் மருந்தாக
பாடும் மீன்களாய் காதலர் எம் இசைக்கோலம்.
துள்ளி விளையாடும் கயல்களாய்
காதலர் எம் கொண்டாட்டம்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

காதலின் வேதனை



ஒரு பார்வையால் என்னை ஆரத்தழுவி -நான் சூட
ஒரு பூவாய்த் தன் இதயத்தை தந்தவன்,
கண்கள் மொழிபேசக், கவிதையால் நெஞ்சைக் கவர்ந்தவன்
அலைபேசியில் -தினமும் நெஞ்சை அலைபாய வைத்து,
என் முகநூலில் தன் முகம் பதித்தவன்
என் நெஞ்சம் அலைபாய நினைவோ தீக்குளிக்க
இன்று-என்னை மறந்தான்



என் உலகே நீயாகி- உன் நிலவே நானாகி
ஒருவரை ஒருவர் சுற்றி வந்தோம்
மண்ணும், மழையுமாய்க் கலந்து-காதற்
கிளிகளாய் இணைந்து காதல் புரிந்தோம்

உன்னைக் காணும் போதெல்லாம்-என்
உயிருக்கோ விடியல்-நீ தழுவும்போதெல்லாம்
என் மெய்யிற்கோ காதல் குளியல்

மெய்யிலோ பெண்மை பூத்துக் குலுங்க
உயிரோ காதல் இன்பத்தை ருசித்து மகிழ
இதயமெங்கும் காதல் மழை –விடியும்வரை
எமக்கோ காமன் பண்டிகை

உன்னிடம் என்னை இழந்த அந்த இராத்திரி
எனக்கோ சொர்க்கபுரி
பூவாய் மலர்ந்த கன்னி என்னைத்-தாயாய்
கனியவைத்த காதலின் தாம்பத்ய நெறி

என்னை நீ ருசிக்க, என்னையிழந்து
உன்னை நான் ரசிக்க, அன்றில் பறவைகளாய்,
காதல் உலகின் அர்தநாரிஸ்வரராய்
ஒருவரில் ஒருவர் கரைந்து கலந்து மறைந்தோம்

என் உயிர் மெய்யில் நீ எழுதிய கவிதை இனிக்க
தாய்மையின் மலர்ச்சி என்னுள் துளிர்க
என் வாழ்விலோ பொன்வசந்தம்
என் இதயமெங்கும் காதலின் சுகந்தம்

என்னில் -நீ இசைத்த காதல் ராகம் ஓயுமுன்
மாதவியைத் தேடிடும் கோவலனாய்,
என் உயிரைக் கொல்லும் காலனுமானாய்-ஏனடா
என் நெஞ்சைத் திருடிய கள்வன் நீ மாறினாய்?

உருகும் மெழுகாய் நான் எரிய
உள்ளமோ எரிமலையாய்க் கொதிக்க
நெஞ்சை ஊடுருவும் ஈட்டி-இடியாய்
இதயத்தை நொருக்கும் சோகச் சம்மட்டி

உன் காதல் கூட வெறும் காமம்தானா?
நாளும் புதுப்பூவை நாடிச்செல்ல
நீயும் வண்டுதானா? நானும் உனக்கு
வண்ணமிழந்து வாடிக் கசங்கிய பூத்தானா?



என் விழிகளிலோ கண்ணீர் வெள்ளமிட
உயிரோ உன்னைக் காணத் தவமாய்த் தவமிருக்க
தேன் சுவைக்க நாளும் வந்த தேனீ-இன்றோ-
தன் பூவனத்தை மறந்து மாயமான சம்போகி?

நீயில்லாத உலகம் நரகாய் மாறிட-
நெஞ்சிலோ சோகப்புயல் ஓயாது வீசிட-காமக்
கருவும், காதல் கனவும் ஒன்றாய்க் கலைந்திட
என் இதயப் பூவனத்தில் பூகம்பம்,
இடி, மின்னல், மழையின்றி சோகப் பெருவெள்ளம்

உன்னைக் காணத்துடித்தும் நீ வரவில்லை
பேசத்துடித்தும் பதிலில்லை-ஊமையாகிப்போனது
ஓயாது என்னை அழைக்கும் உன் தொலைபேசி
திரிந்த பாலாய், பழங்கஞ்சாய் போனதோ
நீ நேசித்த, உன்னைப் பூஜித்த கன்னிராசி

கரையும் அலையுமாய்த் தழுவி மகிழ்ந்த கடற்கரையில்-
சோகம் தழுவிடக் கண்ணீரில் கரைகின்றேன்,
தென்றலாய் நீ தழுவ ஆடிக்களித்த வண்ணமலர்
சருகான மலராய் புழுதியல் கிடக்கின்றேன்

பூவில்லை, பொட்டில்லை, பொன் நகையில்லை
சோபையிழந்த பூ முகத்தில் மஞ்சளில்லை, மகிழ்ச்சியில்லை
பூச்சரம் சூடிடக் கோயிலில் தெய்வம் இல்லை
உன்னைப் பிரிந்து-கைம்பெண்ணாண நிலை
துஷ்யந்தன மறந்த சகுந்தலையின் அவல நிலை

கடலில் விழுந்தால், கரை ஒதுங்கும் சடலம்
காதலரை அச்சுறுத்தும்,
நஞ்சும், தூக்கு கயிறும்-காதலன்
உன்னைக் காமுகனாய்க் காட்டி கொடுக்கும்

ஒரு விபத்தாய் நான் நடத்தும்-என் தற்கொலை-
ஓடும் பேருந்தில் இருந்து உதிர்வது-நெஞ்சில்
ஈரம் இருந்தால் ஒரு துளிக் கண்ணீரை உதிரவிடு.



என் உறவும் உனக்குத் தொல்லையாக-
அழைபேசியில் என் அழுகை குறுஞ்செய்தியாக
நாளையப் பத்திரிகையில் நீ படிக்க- விபத்தாய்
என் மரணம் உனக்குச் செய்தியாகும்



உன்னை பிரிந்த அன்றே நான் இறந்துபோனேன்
பேரின்பமென நீ சுவைத்த பொன்னுடலை விட்டு
விபத்தாய் இறந்து போகின்றேன்-
எங்கிருந்தாலும் வாழ்க
உன்னை வாழ்த்திப்போகின்றேன்

இதயங்களின் சங்கமம் காதல்
உடல்களின் சல்லாபம் காமம்
காதலர் சாகலாம் -காதல் சாவதில்லை
உண்மை காதல் என்று ஒன்றுமில்லை?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

விடியல் நிலவு

மறக்க நினைத்தும் மறவாத நினைவாய்,
அழிக்க நினைத்தும் கல்லில் எழுத்தாய்,
நெஞ்சில் அவள் காதல்.

மறக்க நினைக்கும் போதெல்லாம்,
நினைத்து துடிக்கும் மனம்,
அவளை நினைக்கும்போதெல்லாம்
என்னையே மறக்கும் மனம்.

இணைவது மட்டும் காதல் அல்ல அன்பே-நீ
நலம் வாழ உன்னைப் பிரிவதும் காதல்,
காதலை யாசித்தவளுக்கு
நேசிக்கத் தன் நெஞ்சத்தை ஈந்தவனே,
காதலுக்கு பிரிவையும் தந்தான்?

வற்றிய குளத்தில் துடிக்கும் மீனாய்,
தீப்பற்றிய வனத்தில் தவிக்கும் குஞ்சாய்,
உன்னைப் பிரிந்த சோகத்தில் வருந்தும்
என் காதல் நெஞ்சம்.

கண்ணீர்ப் பூக்கள் உதிரக்-காதுக்குள்
எனைத்தழுவும் தென்றல் சோகம் பகிர
அன்பே போய் வருகின்றேன்

என் நெஞ்சுக்குள் உன் நினைவை விதைத்து
என் கனவுக்குள் காதலை ஒளித்து
விடியல் நிலவாய் வெளிறிப்போகின்றேன்

என் இதயமோ-நிலவாய்
உன் இரவு வானில் உலாவரும்
நீ கனாக் காண ஒளி தரும்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

விடியாத இரவுகள்

காம லீலைகளின்-உல்லாச புரிகளாய்
காமசூத்திரத்தின் புதிய பிரதிகளாய் விலைமாதர் நாங்கள்,
உங்கள் காமத்தீயிலோ எங்கள் கஞ்சிப்பானைகள்
கன்றிக் கனத்திடும் எம் நெஞ்சிலோ சோகவீணைகள்

உங்கள் காமத்தீயில் எம் உடல் வெந்திட
"வேசி" எனும் சொற்தீயில் உயிர் வேகிட
நரகத்தீயில் எம் வாழ்க்கை-இளமை இருக்கும்வரை
சிலநூறுகளுக்கு விலைபோகும் எம் படுக்கை

கோவலன் மடிகளிலோ, மலிவு விலையில் மாதவி
கண்ணகியின் விழிகளிலோ காயாத கண்ணீரத் துளி
காமபோகத்தில் ஆடவரின் விதைப்பு
கண்ணீர்யாகத்தில் அபலைகளின் பரிதவிப்பு

உதயமே இல்லாத எங்களுக்கு-உங்களால்
இரவில்தான் விடியல்-இதயமே இல்லாத உலகில்
இன்றும் விலைமாதர்களுக்கோ மலிவுவிலை
வயக்கராவிற்கோ கறுப்புச் சந்தையிலும் உச்சவிலை

கட்டையாய் விறைத்து கிடக்கும் உடலை
காமக் கறையான்கள் தினம் அரிக்கும்
பட்டமரமான வாழ்வில் நம்பிக்கை -எட்டாத்
தொலைவிலிருக்கும் நட்சத்திரமாய் மின்னும்

இரவிற்கும் விடியல் சொல்ல நிலவுண்டு
எம் விடியலுக்காய் எவருண்டு
துன்ப நினைவுண்டு, பெண்ணாய் பிறந்த துயருண்டு

மாதவியை கைபிடிக்கவும்,-விதவை
கண்ணகிக்கு வாழ்வு கொடுக்கவும் மனிதனில்லை
மங்கையர் வாழ்வில் இன்னும் விடியலில்லை-அன்னை
சீதையோ இன்றும் காட்டில் வாழும் நிலை

சீதனமாய் மொத்த விலை கொடுத்தாள் மனைவி
சில்லறைக்கு விலைபோனாவளோ வேசி
நிலை மாறறும் உலகில் நிலை மாறவில்லை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-13-04-2013

விலைமகளும் குலமகளும்

இது ஒரு பெண்ணின் கதை.
சமூகத்திலோ இவள் ஒரு பரத்தை!
விலைமகள்-உள்ளத்திலோ,
இவளும் இறைமகனைத் தேடும் பக்தை.

ஒளியில் தேவர்களாய் ஒழுக்கம் பேசும் ஆணிணம்-
இருளில் இந்திர, சந்திர, யயாதியாய்,
இவள் மடியில் இன்பம் தேடிட- கற்புக்கரசிகளே ,
கணவனைக் கவரக் காரிகையிடம் இருந்தது என்ன?

இல்லாமையால்-இவள் விபச்சாரம் செய்தாள்
இல்லாள் நீயிருந்தும் -இந்திரன்-
அகலிகையை நாடியதென்ன-அகலிகையும்
கொண்டவனை அறியாது கூடி மகிழ்ந்ததென்ன?

மாதவியை வாழவைக்கவா-தன்னுடமைகளை
கண்ணகி, கோவலனுக்கு வாரிக்கொடுத்தாள்?
அகலிகையும் மகிழட்டும் என்றா இந்திராணி
இந்திரனை இரவில் போகவிட்டாள்?

“கட்டியவன்” இன்பம் பெரிதென்று கருதிடும் பதிவிரதைகள்
இன்னொரு பெண்ணின் கற்பை இழிவு செய்வாரோ?
கற்பும் குலமங்கையர்க்கே என்ற நீதி
ஆண்வர்க்கத்தின் அநீதி

ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்குவது பாவம்
இயேசுவின் போதனை நீதியாய் ஒலிக்க-பிறன்மனை
நோக்காப் பேராண்மை சான்றோர்க்கே அறனாக
காமனை வெல்லத் தடுமாறும் ஆணினம்

இந்திர, சந்திர, கோவல, யயாதி ஆண்கள்
காதல் இல்லாத மணவாழ்வால் கசப்புற்ற புருஷர்களோ?
அகலிகையும், மாதவியும் காதலைத் தேடிய அபலைகளோ?
கண்ணகியும், இந்திராணியும், அரவாணிகளோ?

கௌதமரும்-அண்ணகனோ? அலியோ?
கற்பு -காவிய காலப் பெண்ணின் அணிகலனாய்
ஆண்வர்க்கம் பெண்ணியத்தை அடிமையாக்கிட
நாகரீகமாய் அணிவித்த பொன் விலங்கா?
பலதாரக் கண்ணன் காமுகனா?

ஞானி சாலோமோன் பெண்பித்தனோ?
கடவுள்களும் பலதாரம் கொள்ள-பெண் என்ன
மலிவுச்சரக்க இல்லை போகப் பொருளா?

ஆண்வர்க்கமோ என்றும் அரியணையில்
அரிதான-அல்லி ராஜ்யத்திலும்-அருச்சுனன்
காதல் போகமா இல்லை-காமபோகமா?

காம தகனமூர்த்தியும் மோகினியிடம் மயங்கி
ஐயனாரும் அரிகர புத்திரனாய் பிறந்தது
கதையா இல்லை கற்பனையா?

கடவுளர்க்கும் காமம் இருக்க-காமம் பாவமானதென்ன?
பெண் மட்டும் “விபச்சாரியானதென்ன”?
கூட்டமாய் கல் எறிந்து கொல்ல
இன்றும் ஆண்வர்க்கம் கூடுவதென்ன?
இறைமகனே நீ எங்கே?

உலகின் ஆதித் தொழில் ஒன்றாய்-விபச்சாரம்
இன்றும் அழியாத தொழிலான துன்பச் சமாசாரம்
பெண்மையைப் தெய்வமாயப் போற்றிடல் வேண்டும்
என்றும் பிறன் மனை நோக்காப் பேராண்மை வேண்டும்

வல்லாங்கு. விபச்சாரம் ஒழிந்திடல் வேண்டும்
கற்பு ஆணுக்கும் உண்டென்ற உயர் ஒழுக்கம் வேண்டும்
பெண்மையைப் போற்றிடல் வேண்டும், அறமும்,
ஒழுக்கமும், அன்போடுஉண்மையும் வாழ்வாக வேண்டும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-13-04-2013

காதல் விழுப்புண்

காதல்கூட போர்களம்தான் போலும்-
இதயமெங்கும் எவரும் அறியாத-
இன்னும் ஆறாத காதலின் விழுப்புண்கள்.

சொல்ல முடியாமல்-சொல்லாமல்
துடிக்கின்ற இதயத்தில்
வேல்விழியாள் விளைந்த காயங்கள்
தேன்மொழியாள் சுட்ட தீப்புண்கள்

காலம்மாறினாலும்-காதல்
காயங்கள் ஆறவில்லை-
கனிமொழியாள் காதலும்-துடிக்கும்
நெஞ்சைவிட்டு நீங்கவில்லை.

ஏங்கும் நினைவுகளுக்குள்
துயிலாத விழியாய்-அவள் நினைவு
தவிக்கும் மனசுக்குள்
இன்னும் உறங்கும் விதையாய்
அவள் காதல் உறவு.

துடிக்கும் இதயம்-இன்றும் அவளை
எண்ணித் துடிக்கும்
தவிக்கும் நெஞ்சம்-கலையாத அவள்
காதல் உறவால் கண்ணீர் மழை தூவும்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023

யாரிவள் தேவதை

ஆடுவது மயிலா? அழகுநடை போடுவது அன்னமா?
உள்ளம் மகிழ்ந்திடத் துள்ளியது மானா?
மனதைக் கொள்ளை கொண்டது-தேவதையா?
வனமோகினியா? சொல் மனமே?

புன்னகை புரிந்தவள் ரம்பையா இல்லை மேனகையா?
என்னை மயக்கியவள் மாதவியோ இல்லை ஊர்வசியா?
கானகத்தில் கண்ட மயில் கம்பன் சீதையோ-இல்லை
கவிகாளிதாசன் சகுந்தலையோ சொல் மனமே.

மண்ணழகு, மரமழகு-வாணையணைத்திட
வளையலாய் இலைகள் சூடிய கிளையழகு,
ஈர இதழ்களால் இருகரையும் முத்தமிட்டு இடைநெளிய
ஓடிடும் வெள்ளி நதியழகு,
பாலை மனதிலும் தேன்மழை பொழிந்திடும்
காதல் சிலையோ அழகிலும் பேரழகு .

இல்லையென சொல்லும் இடையோ-நூலளவு
இருக்கும் என சொல்லும் இவள் இதயமோ வானளவு
சிரிக்கும்போது செவ்வாய் காட்டும்-முத்தழகு
நுதலோ மூன்றாம் பிறையழகு,- கனிமொழியோ
குறளும், கவிதையும் மொழியான பேரழகு

புல்லழகு, பூவழகு, அழகோ பேரழகு
அமுதமாய் நள்ளிரவில் பொழியும் அன்பு மழையழகு
நட்பழகு-நாம் கொண்ட நல்லுறவழகு-இது
தெய்வம் தந்த திருவுறவு-தேவதையே-எந்தை
தேவாதி தேவனைத் தொழுதல் அழகிலும் பேரழகு.

தினம் தேன்மலர் தேடிடும் தேனியல்ல
தீயில் விளையாடி மடிந்திட விட்டிலுமல்ல,
காமக் கடலில் திளைத்திட மன்னன் யயாதியுமல்ல
மேனகையால் தவம் கலைந்த முனியுமல்ல

வாசுகி வள்ளுவனாய், ஜானகி இராமனாய்
வாழத்துடிக்கும் மனிதனடி இவன்.
எங்கு தொட்டாலும் இனிக்கும் தேனாய்
எங்கு பட்டாலும் மணக்கும் வாசச்சந்தணமாய்
எங்கும் நிறைந்த இறைவனை
அன்புசெய்து இன்புறுவதே என் வாழ்க்கையடி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2023